DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
In the Court of the Assistant Sessions Judge, Gingee

| | |
|---|---|
| Sessions | SC Case No.8/2022 |
| Deposition of Witness for | Prosecution<br>Defence<br>Court |
| Name | **PW – 11 செந்தாமரைச்செல்வன்** |
| Father's Name | ராமசாமி |
| Village | செஞ்சி |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | 60 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969. On 27.03.2025

**முதல் விசாரணை**

நான் அனந்தபுரம் காவல்நிலையத்தில் 12.09.2021ம் தேதி காவல் நிலைய பணியிலிருந்த போது அணையேரி கிராமத்தை சேர்ந்த அல்லாபாஷா மகன் பாஷா வயது 48 என்பவர் கொடுத்த புகார் மனுவை பெற்று அனந்தபுரம் காவல்நிலையம் குற்ற எண் 437/2021 U/s 294(b), 324, 307 இ.த.ச படி வழக்கு பதிவு செய்து ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். **மேற்படி முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ-4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

புகாரில் தேதி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். புகாரில் சம்பவத்தை பார்த்த சாட்சிகள் பெயர் குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் எந்த சான்று பொருளும் மகசரில் கைப்பற்றபடவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கின் எதிரி தன்னை அ.சா.2 தாக்கிவிட்டதாக புகார் கொடுத்தார் அந்த புகாரை ஏற்று நீங்கள் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. சம்பவ தேதியில விசாரணை அதிகாரி காவல்நிலையத்தில் தான் இருந்தார் என்றாலும், நீங்கள் அவருக்கு

தெரியாமல் இந்த முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தீர்கள் என்றால் சரியல்ல.